# திருமலைத்தீபம்

# THIRUMALAI THEEPAM

எழுந்து ஒளி வீசு

திருகோணமலை மறைமாவட்டத்தின் மாதாந்த பத்திரிகை

சுடர் 23
விலை 20/=

மார்கழி இதழ்-2015, ஆரம்பம் 15 மாசி - 2013. திருமறைக்கல்வி நடுநிலையம், இல: 297 டொக்கியாட்வீதி, திருகோணமலை. தீபம் - 23
E-mail- catetcota@gmail.com
T.P- 026 2221022, 0263202532


**"விண்ணிலிருந்து விடியல் நம்மைத் தேடி வருகிறது"** (தூய லூக்கா 1:79)

# Merry Christmas


## HAPPY BIRTHDAY


**வாழ்வு எனும் கொடையை ஆசீர்வாதமாகப் பெற்ற நன்நாள்......**

December 09: பேரருட்திரு ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை.
December 17: திருத்தந்தை பிரான்சிஸ்
December 25: பேரருட்திரு கிறிஸ்டியன் நோயல் இம்மானுவல் ஆண்டகை.

**வாழ்வின் அழைப்பை ஏற்று அர்ப்பணித்த பொன்னான நாள்......**


December 20: பேரருட்திரு ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகையின் 54வது குருத்துவ நினைவுநாள்.




'துறைமுகத்தில் இருக்கும் கப்பல்
பாதுகாப்பாக இருக்கிறது.
ஆனால்'
அதற்காக அந்தக் கப்பல்
உருவாக்கப்படவில்லையே!
கடலின் நீரைக் கிழித்துக்கொண்டு
கரை கடந்து செல்லும்போதுதான்
கப்பல் கப்பலாக உள்ளது!
பணியென வந்தபின்
பாதுகாப்பின்மையும்
உமது பராமரிப்பே என்பது
நிரந்தரமான நிஜம்.
(இது அருட்தந்தை ஜெரியின் சிந்தனைத் துளிகள்.)

அன்புநிறை திருத்தந்தையே, பாசமிகு ஆயர்களே,
உங்கள் வாழ்வில் மேற்கூறிய வரிகள்
நிஜமானதை, நிஜமாகிக்கொண்டிருப்பதைப்
பார்க்கிறோம்.
இதயம் நிறை மகிழ்ச்சியோடு வாழ்த்துகிறோம்!




அன்பு நிலைபெற, ஆசை நிறைவேற,
இன்பம் நிறைந்திட,
ஈடில்லா இந்நாளில்
உள்ளத்தில் குழந்தையாய், ஊக்கத்தில் குமரனாய்,
எண்ணத்தில் இனிமையாய் ஏற்றத்தில் பெருமையாய்,
ஐயம் நீங்கி,ஒற்றுமை காத்து,
ஒரு நூற்றாண்டுஅகவைக் கடந்து
நீடூழி வாழ வாழ்த்துகிறோம்.

**திருமலை மறைமாவட்ட**
**குருக்கள், துறவியர், பொதுநிலையினர்.**
**இவர்களது பணிவாழ்வு சிறக்க செபிப்போம் வாழ்த்துவோம்.**

## WISH YOU A MERRY CHRISTMAS



வாசகர்கள், அன்பர்கள்,
வாடிக்கையாளர்கள், எழுத்தாளர்கள்
அனைவருக்கும் திருமலைத் தீபத்தின்
நத்தார் நல் வாழ்த்துக்கள்.



# ஆயரின் செய்தி

**கிறிஸ்து இயேசுவில் அன்புள்ள சகோதர சகோதரிகளே,**

திருமலை தீபம் மூலமாக மீண்டும் உங்களோடு உரையாடுவதில் மகிழ்ச்சியடைகிறேன். ஆண்டவர் இயேசு பலர், பல நிகழ்ச்சிகள் மூலமாக எம்மை வழிநடத்தி தனது திட்டங்களை நிறைவேற்றி வருகிறார். இந்நாட்களில் தொடர் மழை காரணமாக வெள்ளம் ஏற்பட்டு பலர் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இவர்களையும் எமது சிந்தனையில் நிறுத்துவோம். நவம்பர் மாதம் மறைமாவட்ட ரீதியில் இரு முக்கிய நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

1. குருக்கள், துறவற சகோதர சகோதரிகள், தெரிவுசெய்யப்பட்ட பொதுநிலைக் கிறிஸ்தவர்களுக்கான ஆயத்த கருத்தரங்கும், 2016ம் ஆண்டுக்கான திட்டமிடலும் நடைபெற்றது. நவம்பர் மாதம் 7ம் திகதி நடைபெற்ற இக்கருத்தரங்கில் **'இரக்கத்தின் ஆண்டு' எனும் தலைப்பில் அருட்தந்தை அல்வின் பீற்றரும், 'இறைவனின் மந்தையை அறிதல்'** எனும் தலைப்பில் அருட்தந்தை ஏ.ஏ. நவரெட்ணமும் உரையாற்றினார்கள். மறைமாவட்ட மேய்ப்புப்பணி பேரவைக்கான ஆயத்த கருத்தரங்காக ஒழுங்கு செய்யப்பட்டது.

2. மறைமாவட்ட மேய்ப்புப்பணிபேரவைக் கூட்டம் நவம்பர் 10ம் திகதி நடைபெற்றது. இக்கூட்டத்தில் 2016ம் ஆண்டுக்கான மேய்ப்புப்பணி செயல்பாடுகளுக்கான தீர்மானங்கள் பேரவையினால் அங்கீகரிக்கப்பட்டது. இதன்படி 2016ம் ஆண்டுக்கான மூன்று முக்கிய விடயங்கள் மேய்ப்புப்பணி திட்டங்களாக முன்வைக்கப்பட்டன.

1. 'இரக்கத்தின் ஆண்டு'
2. இறைவனின் மந்தையை அறிதல்
3. அன்பியங்களை ஊக்கப்படுத்துதல் / புதுப்பித்தல் / உருவாக்குதல்

தொடர்ச்சி 2ம் பக்கம்

# திருமலை மறைமாநில மேய்ப்புப்பணி

## பேரவையின் 4வது மகாநாடு 2015.11.10



திருமலை மாநில மேய்ப்புப்பணிச்சபையின் 4வது மகாநாடானது 2015.11.10 அன்று காலை 8.00 மணிக்கு உப்புவெளி மேய்ப்புப்பணி நிலையத்தில் அங்கத்தவர்களின் பெயர்களைப் பதிவு செய்யும் நிகழ்வுடன் ஆரம்பமானது அதனைத் தொடர்ந்து எமது திருமலை மறைமாநிலத்தில் புதிய ஆயர் பேரருட்திரு நோயல் இம்மானுவேல் ஆண்டகை அவர்கள் வரவேற்று அழைத்துச் செல்லப்பட்டார் மங்கள விளக்கேற்றலுடனும் இறை வழிபாட்டுடனும் அன்றைய நிகழ்வுகள் இனிதாய் ஆரம்பமாயின.

இரக்கத்தின் ஆண்டிற்கான செயல் திட்டங்களை அருட்பணி ஏ.ஏ. நவரெட்ணம் அடிகளார் முன்வைத்தார் இதன் போது மறைமாநில ஆயர் அவர்கள் இரக்கத்தின் ஆண்டிலே தூய லூக்கா நற்செய்திக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும் எனக்கேட்டுக்கொண்டார்.

தொடர்ச்சி 7ம் பக்கம்

'ஆண்டவர் உங்களில் பேருவகை கொள்கிறார்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களோடு பேசுகிறேன்..

அருட்பணி N.C அருள்வரதன்

வருடத்தின் இறுதி மாதம். இம் மாதத்திலே எத்தனையோ புதிய விடயங்கள் உள்ளடக்கப்படும்போது மீண்டும் உங்களோடு பேச எனக்கொரு வாய்ப்பானது பெருமகிழ்வே.

இம் மாதத்திலே ஆன்மீக நிலைகளை நோக்கும் போது தூய பிரான்சிஸ் சவேரியார் விழாவைக் கொண்டாடுகின்றோம். அதேவேளை அமல உற்பவ அன்னையின் விழா குவாடலூப்பே அன்னையின் விழாக்களையும் கொண்டாடுகின்றோம்.

இன்னும் சிறப்பாக இயேசுவின் பிறப்பினையும் கொண்டாடி மகிழ்கின்றோம் மேலும் இம்மாதத்திலே திருக்குடும்பத்தின் விழா மாசில்லாக் குழந்தைகளின் விழாக்களையும் நினைவு கூர்ந்து கொண்டாடுகின்றோம். அதேபோன்று திருக்குடும்பக் கன்னியர் சபையினர் தமது விழாவைக் கொண்டாடும் போது அமலமரித் தியாகிகள் சபையினரும் தமது விழ-ாவைக் கொண்டாடுகின்றனர். தொடர்ந்து பணிவாழ்வு இறை ஆசீரோடு சிறப்புற எமது வாழ்த்துக்கள்.

அதேவேளை இம்மாதத்திலே ஓய்வு பெற்ற ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகையவர்களும் தமது பிறந்த தினத்தை கொண்டாடுகின்றனர். கிறிஸ்து பிறந்த நாளிலே நமது புதிய ஆயர் நோயல் இம்மானுவேல் ஆண்டகையும் தமது பிறந்த நாளைக் கொண்டாடுகின்றார். அதேபோன்று இம்மாதத்திலே திருத்தந்தை பிரான்சிஸ் ஆண்டகையும் தமது பிறந்த நாளைக் கொண்டாடுகின்றார். எனவே முக்கிய பிறந்த நாட்களை இம்மாதம் கொண்டிருப்பது சிறப்பானதும் மகிழ்வூட்டுவதுமாகும். வாழ்துகிறோம்.

அடுத்து நமது நாட்டின் அரசியலை நோக்குவோம் சிறைக்கைதிகளின் விடுதலை தொடர்பான செய்திகளே பிரதானமாக பேசப்படுகின்றது. அவர்களின் உணவுத் தவிர்ப்பு போராட்டமும் முடிவுகளை எட்டாமல் தொடர்ந்த வண்ணமிருக்கின்றது இது தொடர்பாக நாட்டின் பல பாகங்களிலும் முடங்கள் நிலைகளும் வெளிக்காட்டப்பட்டு தமது எதிர்ப்புகளையும் சிறைக் கைதிகளின் விடுதலைகளையும் வலியுறுத்தி உள்ளனர்.

அதேவேளை யுத்தகாலத்திலே வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்ட யாழ்பாணம் இஸ்லாமியர்கள் மீண்டும் தங்களது இடங்களிலே வாழ்வதற்கு ஆவன செய்யப்பட வேண்டும் என்னும் கோஷமும் எழுப்பப்பட்டுள்ளது. உண்மையில் அவ்விடயம் கவனத்திற்கொள்ளப்பட்டு சிதறிக்கிடக்கின்ற மக்கள் தமது இடங்களிலே மீளக்குடி அமர வேண்டிய வழிகள் பிறக்க நாமும் வேண்டி நிற்போம்.

எனவே வருடத்தின் இறுதிமாதமான இம்மாதத்திலே அனைவருக்கும் கிறிஸ்மஸ் நல் வாழ்த்துக்களையும் புலர உள்ள புது வருடத்தின் புத்தாண்டு நல் வாழ்த்துக்களையும் முன்கூட்டியே தெரிவித்து மீண்டும் உங்களோடு பேசுவேன் எனக் கூறிநிற்கின்றேன்.

......நன்றி.....

1ம் பக்கத் தொடர்ச்சி.....

**1. இரக்கத்தின் ஆண்டு:**

திருத்தந்தை பிரான்சிஸ் 2015 டிசம்பர் 08 முதல் 2016 நவம்பர் 20 வரை இரக்கத்தின் ஆண்டாக அறிவித்திருந்தார். இதன்படி இது திருச்சபை முழுவதுக்ககுமான திட்டமாக அமைந்துள்ளது. இந்த ஆண்டை அர்த்தமுள்ளதாக்க மறைமாவட்ட மட்டத்திலும், பங்குகளிலும் பல திட்டங்கள் மேற்கொள்ளப்பட இருக்கின்றன. விசேடமாக திருவழிபாடு, செபக்கூட்டங்கள், மற்றும் ஒப்புரவு வழிபாடுகள் மூலமாக இறையிரக்கத்தை ஒவ்வொருவரும் அனுபவிக்கவும், வாழ்ந்து காட்டவும் முயல்வோம். யூபிலி ஆண்டைத் தொடங்கும்போது யூபிலி ஆண்டிற்கான வாயிலை முறைப்படி திறந்து வைப்பது திருச்சபையின் மரபு. இது பொதுவாக உரோமையில் தூய இராயப்பர் பசிலிகாவில் நடைபெறும். ஆனால் இரக்கத்தின் ஆண்டாக நாம் குறிப்பிடும் யூபிலி ஆண்டைத் தொடங்க உலகில் அனைத்து மறைமாவட்டங்களிலுமுள்ள பேராலயங்களிலும் மற்றும் ஆயரால் குறிப்பிடப்படுகின்ற ஏனைய முக்கிய ஆலயங்களிலும் யூபிலி ஆண்டிற்கான புனித நுழைவாயிலை திறந்து வைக்கலாம். இதனடிப்படையில் எமது மறைமாவட்டத்தில் டிசம்பர் 20ம் திகதி தூய மரியாள் பேராலயத்தில் யூபிலி ஆண்டிற்கான நுழைவாயில் திறந்து வைக்கப்படும். இது மறைமாவட்ட நிகழ்ச்சி என்பதால் அனைத்து குருக்களையும் பங்குகளிலிருந்து பிரதிநிதிகளையும் எதிர்பார்க்கிறோம். பேராலயப் பங்குத்தந்தை அருட்பணி தே. கிங்ஸ்லி ரொபட் மேலதிக விபரங்களை அறியத்தருவார். அதே தினத்தில் பாலையூற்று தூய லூர்து அன்னை திருத்தலத்திலும், இறையிரக்க ஆலயத்திலும் புனித நுழைவாயில் திறந்து வைக்கப்படும்.

**2. இறைவனின் மந்தையை அறிதல் :**

இறைவனின் பணியை மேற்கொள்ள அழைக்கப்பட்ட நாம் அவரது மந்தையை நன்கு அறிந்திருக்க வேண்டும். இப்பின்னணியில் 2016 ஆண்டு நாம் யாருக்கெல்லாம் பணிசெய்ய அழைக்கப்பட்டுள்ளோமோ அவர்களை நன்கு அறிவது மிக முக்கியம். ஒரு ஆயன் தனது மந்தையின் மணத்தை அறிந்திருக்க வேண்டும் என்று திருத்தந்தை பிரான்சிஸ் கூறுவார். எமது மக்களின் நிறைகுறைகள், தேவைகள் நன்மை தீமைகள், விருப்பு வெறுப்புகள், ஆன்மீக ஆழம், பொருளாதார நிலமை போன்றவற்றை அறியும் போது அவர்களின் தேவைகளை இனம்கண்டு அவர்களைப் புரிந்து கொள்ளவும் பணிசெய்யவும் முடியும். எனவே ஆயர் முதல், குருக்கள், துறவறத்தவர் பொதுநிலை கிறிஸ்தவர்கள் அனைவரும் தாம் பணிசெய்யும் அனைவரையும் தெரிந்து கொள்ள இந்த ஆண்டில் சிறப்பான முயற்சி எடுக்க வேண்டும்.

**3. அன்பியங்கள்**

கிறிஸ்தவர் நாம் எப்போதும் ஆன்மீகத்தில் வளரவேண்டும், ஆழப்படுத்தப்பட வேண்டும். இந்த ஆழமான ஆன்மீக அனுபவத்தை தரக்கூடியதாக சிறிய கிறிஸ்தவ சமூகங்கள் (அன்பியங்கள்) அமைந்துள்ளன. 2016ம் ஆண்டு முதல் நீண்டகால திட்டமாக அன்பியங்களை உருவாக்க தீர்மானித்துள்ளோம். ஏற்கெனவே தற்போது 7 பங்குகளில் 76 அன்பியங்கள் இயங்குகின்றன. பல பங்குகளில் அன்பியங்கள் தொடங்கப்பட்டாலும். அவற்றின் வேகம் குறைந்துள்ளது. எனவே இதுபோன்ற அன்பியங்களை பலப்படுத்தி, புதுப்பித்து அன்பியங்கள் இல்லாத இடங்களில் அவற்றை புதிதாக தொடக்கி வைப்பது எமது நோக்கம். இதன் பின்னணியில் கருத்தரங்குகள், உரைகள், பல வழிகாட்டல்கள் ஒழுங்கு செய்யப்படும்.

2016ம் ஆண்டு தை மாதம் நான் வெளியிடவிருக்கும் எனது முதல் மேய்ப்புப்பணி சுற்றுமடலிலே மேலதிக விபரங்களை அறியத்தருவேன்.

டிசம்பர் மாதம் 27ம் நாள் திருக்குடும்பப் பெருவிழா. குடும்பங்களில் நாம் எமது கடமை, பணி பற்றி போதிய விழிப்பு பெற்று சூசை, மரி இயேசு அடங்கிய திருக்குடும்பத்தை மாதிரியாகக் கொண்டு வாழ முன்வருவோம். சவால்கள் நிறைந்த இவ்வுலகில் கிறிஸ்தவ விழுமியங்களை நாம் தயங்காது வாழ்ந்து காட்ட வேண்டும். நாளாந்த குடும்ப செபத்திற்கு முன்னுரிமை கொடுத்து ஒருவரையொருவர் புரிந்து, விட்டுக்கொடுத்து, இரக்கம் காட்டி வாழ்ந்து காட்டுவோம்.

டிசம்பர் மாதம் 8ம் திகதி அமலோற்பவ அன்னை பெருவிழா. அன்று அமலமரித் தியாகிகள் சபைக் குருக்களின் பெருவிழா. எமது மறைமாவட்டத்தில் பாடசாலை மற்றும் பங்குகளில் பணியாற்றும் அமலமரித் தியாகிகள் சபையைச் சார்ந்த குருக்களுக்கு எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். இவர்களது பணி சிறக்க தொடர்ந்து செபிப்போம்.

டிசம்பர் மாதம் 27ம் திகதி திருக்குடும்பப் பெருவிழா. திருக்குடும்ப கன்னியர் சபையினர் தமது திருவிழாவைச் சிறப்பிக்கின்றனர். இவர்களை நாம் வாழத்துகின்றோம். இவர்களுக்காக செபிப்போம்.

அனைவருக்கும் கிறிஸ்து பிறப்பு பெருவிழா, புத்தாண்டு பெருவிழா வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இக்காலம் மகிழ்ச்சியின், சமாதானத்தின் காலமாக அமைய செபிக்கின்றேன்.

**குழந்தை இயேசு நம் அனைவரையும் ஆசீர்வதித்துப் பாதுகாப்பாராக.**

கிறிஸ்துவில்,
பேரருட்திரு கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல்
திருகோணமலை மறைமாவட்ட ஆயர்

# ~ வத்திக்கான் வானொலி ~




டிசம்பர்.02.2015 இரக்கத்தின் யூபிலி என்ற கருத்தை நான் தனித்து, சுயமாக உருவாக்கவில்லை, எனக்கு முன் பணியாற்றிய திருத்தந்தையர் இரக்கம் குறித்து கூறிவந்த கருத்தையே நான் தொடர்ந்து வலியுறுத்த விளைகிறேன் என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கூறியுள்ளார்.

இரக்கத்தின் யுபிலி என்ற கருத்தை திருத்தந்தைக்கு எவ்விதம் வந்தது என்று கேட்கப்பட்ட கேள்விக்கு இவ்வாறு பதிலளித்த திருத்தந்தை , தான் வழங்கிய முதல் நண்பகல் மூவேளை செப உரையிலும் வத்திக்கான் பங்குக் கோவிலான தூய அன்னா கோவிலில் ஆற்றிய முதல் திருப்பலியிலும் இரக்கத்தைப் பற்றிதான் பேசியது, தூய ஆவியாரின் தூண்டுதலால் தான் என்று கூறினார்.

துன்பம் நிறைந்த செய்திகளை மீண்டும் மீண்டும் கேட்டுப் பழகிபோய்விட்ட நமக்கு, இறைவனின் இரக்கத்தை, கருணையை பற்றிக் கேட்பது மிகவும் அவசியம் என்று தனது பேட்டியில் கூறிய திருத்தந்தை, திரு அவையானது, போர்க்களத்தில் பணியாற்றும் ஓர் மருத்துவமனை போன்றது என்ற உருவகம் தனக்கு மிகவும் பிடித்த உருவகம் என்று சுட்டிக்காட்டினார்.

மக்களைக் கொல்வதற்கு சக்திவாய்ந்த கொலைக் கருவிகளை உருவாக்குவதிலும், அவற்றை விற்பனை செய்வதிலும் இவ்வுலகம் செய்துவரும் முயற்சிகளை முறியடிக்க, கருணை, இரக்கம், ஒப்புரவு ஆகிய முயற்சிகளை மேற்கொள்வது ஒன்றே இவ்வுலகை மீட்கும் என்று திருத்தந்தை தன்பேட்டியில் வலியுறுத்தினார்.

ஆதாரம் வத்திக்கான் வானொலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்மஸ் கவிதை

Fr. N.C

"A"

- பனிமேகக் கூட்டங்கள்
- பரந்தவைகள் உயர்ந்தெழுந்தே
- மாடடையும் குடிலதுவே
- வானவரின் கீதங்கள் வாழ்த்தி எழும்போது
- வீண்மீனும் வானிலே வழிகாட்டத் தோன்றவே
- மண்ணிலே நமைத்தேடிவந்தவை

"B"

- ஞானிகளும் வந்தே வாழ்த்திச் செல்ல
- மாபரனார் தேர்ந்த இடம்
- நாமொன்றாய் வாழ்த்திப் பாடுவோமே
- மாமரியாள் மாபரனைத் தருகின்றாளே
- நிறைந்தவைகள் தொடர்ந்துவர



- பகுதி "B" இல் உள்ள தொடர்களை
- பகுதி "A" இல் சரியான இடத்திலே வையுங்கள்
- 5 தொடர்களும் சரியாக வைக்கப்பட்டால் வெற்றி பெறுவீர்கள்
- பலரும் சரியாக வடிவமைத்தால் குலுக்கல் முறையிலே தெரிவுகள் இடம் பெறும்

1ம் பரிசு 500/=
2ம் பரிசு 300/=
3ம் பரிசு 200/=

முடிவுத் திகதி : 31.12.2015

# இறைமகனார் புகழ்பாட

Fr. N.C



வானுயர்ந்த மேகமொன்றாய்
சேர்ந்து அவை இருள்கூட்டி
கொட்டும் பனிக் குளிரும்
கொடுமையாய் உடல் நடுங்க
கொட்டிலவை மாடடையும்
குடிலதுதான் இடையரிடம்
மண்ணுலகில் இறைமகனார்
மனு உருவாய்ப் பிறந்தாரங்கே

வானவரின்கீதங்கள் வாழ்த்திஎழும்போது
மாமரியாள் தன்மகனைக்கண்டு அவர்
மனம்நிறைந்து பூரித்துநிற்கையிலே
ஏழைஇடையரும் ஒன்றாகியே
இறைமகன் தனைக்கண்டநிறைவுடனே
மகிழ்ந்தே பூரித்து நின்றவர்கள்
குழந்தையின் தரிசனம் கண்டதனால்
நிறைந்தநிலைகளால் மகிழ்வார்களே

வறுமையின் கோலங்கள் பூண்டே
ஏழ்மையின் வடிவங்களேற்றார்
கட்டவும் உடையின்றி
கடும்பனியின் வேளையிலே
மாட்டுத் தொழுவமதில்
மாபரனார் பிறந்திடவே
வானிலே தாரகையும் தோன்றியே
வளமான நிலைகாட்ட வழிகாட்டுமே

ஏழ்மையின் வடிவிலே இறைமகனார்
தாழ்நிலை தன்னைதேர்ந்துகொண்டே
வாழ்விலே வசந்தங்கள் வனப்புக்களின்றியே
ஏழ்மையின் கோலம் பூண்டவராய்
கொட்டும்பனியுடன் கொடிய மழைவேறாக
கோபுரமாய் உயர்ந்தவைகள் நின்றாலும்
பிறப்பின் செய்தி கேட்டு ஞானிகளுமே
பெருமகிழ்வாய் தரிசித்து சென்றார்களே

வானவர்கள் கீதங்கள் பாடிடவே
வந்தவராம் இயேசு பிரான் மண்மீதே
தான் தேர்ந்த பாதைகள் துயர் நிறைந்தே
வறுமைக்குள் நசுங்கியவர் பிறந்தாலுமே
வளமான நிலைகளிலே நமது வாழ்வு
விளங்கியவை உயர்வினையே காண்பதற்காய்
தானேற்ற நிலையின் தொடக்கமதை
நாமெண்ணிப் பெருமையாய் பாடுவோமே

# பூவனத்து ரோஜா

வானத்து நட்சத்திரம்
வழியது காட்டி நிற்க!
வானக சாத்திரிகள்
வழிபட்டார் இயேசுவினை!

கானகத்து நிலவெறித்த
கதைபோல நாமிங்கே!
ஏனத்தை ஏந்துவோமே
என்று நாம் கலங்குகின்றோம்!

பூவனத்து ரோஜாவாய்
பூமி பாவம் தீர்க்கவென
புண்ணியராம் இயேசுபாலனை
புத்தொளியைத் தந்திடுவார்!

அஞ்சு வர்ண கிளி மொழியே
கெஞ்சுகின்றோம் எமது தேசம்
பஞ்சம் பசியகன்று
பாரில் புகழ் பெற்றிடவே!

பாவமது சுமை போக்க
பரமனின் மகனாய் வந்தீர
போவதற்கே நீரெமக்கு
புதுப்பாதை தாருமையா!

ஏழைகள் பரம்பரையை
எந்நாளும் வைத்திடாதே!
தாழை மலர் நறுமணமாய்
தரணி வாழ வைத்திடுவீர

ஊழல்கள் அற்ற நிலை
உருப்பெறவே வேண்டுமையா!
உழவர் தொழில் சிறந்து
கருவூலம் நிறைத்திடுவீர்!

ஆன்மீகத் தலைவரெல்லாம்
அடியோர்க்கு சேவையாற்றி!
கடன் விழா கோலோச்சி
கொடிபறக்கவைத்திடுவீர்!

கல்வியின் பொறிமுறையால்
எல்லோரும் பயன் பெறவே
இல்லங்கள் பிறக்கும் நத்தார்
இனிய வழி காட்டிடுமே

**கலைக்கோட்டன் அ. இருதயநாதன்**

# கிறிஸ்து பிறப்பு

அகிலந் தன்னை மீட்க,
ஆன்மீகப் பொக்கிஷத்தைப் பொதிந்து
மாட்டுக் கொட்டினிலே
மனுமகன், மரிமகன் உதித்தாரே

ஆட்டு இடையர்களுக்கே
ஆண்டவனின் பிறப்பு வரவு கூறப்பட்டது
அன்பு, கருணை, தியாகம் கொண்ட
திருமைந்தன் பிறப்போ
மண்ணுலக திறவு கோலானது
பஞ்சபூதங்களும் இனம் புரியா
உற்சாகத்தை கொண்டாடி
மாபரன் இயேசுவை வரற்றேன

இன்றே!
கிறிஸ்து பிறப்பு சுயநலம் என்னும் பேரில்
அலங்கோலமாக அரங்கேற
"குறுஞ் செய்தி தகவலாய்" கிறீஸ்துவின்
பிறப்பு குறுகிப்போன அவலம்...
சிசு பாலன் பிறப்புக்கும்
புதிய பொருள் வாங்கி,
புதிர் போடும் மானிடர்க்காய்
இன்னுமொரு மார்கழி
மலரத்தான் வேண்டுமா?



திருமதி பிறிஜட்சுரேந்திரா
அன்புவழிபுரம்

# செயலாக்குவோம்

## இன்று இயேசுவுக்கு

- **தம் பணிகளைச் செய்ய நம் கரங்கள் அன்றி வேறு கரங்கள் அவருக்கில்லை.......**
- **நடந்து செல்வதற்கு நம் கால்கள் அன்றி வேறு கால்கள் அவருக்கில்லை..........**
- **உண்மையாய் பேசுவதற்கு நம் வாய் அன்றி வேறு வாய் அவருக்கில்லை.........**
- **உலகை அன்பு செய்வதற்கு நம் இதயம் அன்றி வேறு இதயம் அவருக்கில்லை........**
- **கருணை கொண்டு பார்ப்பதற்கு நம் கண்கள் அன்றி வேறு கண்கள் அவருக்கில்லை.........**
- **உலகை மாற்றி அமைக்க நம் நம்பிக்கையின்றி வேறு நம்பிக்கை அவருக்கில்லை......**
- **ஏற்றுச் செயல்பட்டால் தொடர்ந்து மீட்பை நம் வழியாகத் தொடர்வார்.........**
- **இல்லையேல் வேறொரு இறைப்பணியாளரை நமக்குப் பதிலாய் உருவாக்குவார்.**



# 65வது தேசிய கத்தோலிக்க இளைஞர் சம்மேளனத்தில் திருகோணமலை மறைமாவட்ட கத்தோலிக்க இளைஞர்கள்

கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் அனுசரணையில் மொரட்டுவ சுபோதி தியான இல்லத்தில் கார்த்திகை மாதம் 20,21,22இல் தேசிய கத்தோலிக்க இளைஞர் சம்மேளனம் நடைபெற்றது. இதற்கு பேராலயம், பாலையூற்று அன்புவழிபுரம், குவாடலூப்பே, செல்வநாயகபுரம், உவர்மலை, இறைஇரக்கம், ஆகிய பங்குகளில் உள்ள உறுப்பினர்களும் மறைமாவட்ட கத்தோலிக்க இளைஞர் ஒன்றிய இயக்குனர் அருட்பணி எஸ். எஸ். ஜோன்பிள்ளை அவர்களும் பங்குபற்றினார்கள்.

இயக்குனர்
மறைமாவட்ட கத்தோலிக்க இளைஞர் ஒன்றியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைமாவட்ட பாதுகாவலர் தூய லொயலா இன்னாசியார் பரமனின் சேவைக்காகப் பள்ளிப்படிப்பு

அருட்தந்தை ஆஞ்சலோ பொன்னையா இயே.ச.

போர்வீரனாகிய இனிகோவிற்கு இயேசுவைப் போதிக்க அடிப்படைக் கல்வி இல்லாதது ஒரு பெருந்தடையாக இருந்தது. பல்வேறு கோணங்களில் இருந்து எழுந்த எதிர்ப்புகளையும், சவால்களையும் வெற்றிகொள்ள இலத்தீன் மொழிகற்க வேண்டிய கட்டாயம் அவருக்கு ஏற்பட்டது. தனது 33வது வயதிலே பார்சலோனா நகருக்கு கால் நடையாகச் சென்று பள்ளிச் சிறார்களோடு வகுப்பறையில் அமர்ந்து இலத்தீன் மொழியின் அடிப்படை இலக்கணத்தைக் கற்கத் தொடங்கினார். இரண்டாண்டு ஆரம்பக் கல்வியைக் கற்றபின் அல்கலா, சலமன்கா என்ற நகர்களில் உள்ள பல்கலைக் கழகங்களில் படித்து இளநிலைப்பட்டதாரியாக வெற்றிபெற்று வெளியேறினார். பல்கலைக்கழக வாழ்வில் நால்வர் அவரது நண்பர்களாக இணைந்து கொண்டனர். எளிமையான இறை பக்தியோடு அமைந்த இனிகோவின் வாழ்வு அவர்களைக் கவர்ந்திருக்க வேண்டும் இனிகோவுடன் இணைந்து அவர்களும் சாக்குடை அணிந்து, பிச்சையெடுத்து முச்சந்திகளில் நற்செய்தி போதிக்கும் பணியில் ஈடுபட்டனர். அவர்களுடைய போதனையால் கவரப்பட்ட பலர் தமது வாழ்க்கை முறைகளை மாற்றிக் கொண்டனர். அன்றைய மதத் தலைவர்களுக்கு இது ஒரு பெருஞ்சவாலாக இருந்தது. இறையியல் படிப்பறிவில்லாத சாதாரண பொதுநிலையினர் ஆகிய இவர்கள் இப்படிப் போதிப்பதால் தப்பறைக் கொள்கைகள் மக்கள் மனதிலே விதைக்கப்படலாம் என அஞ்சினர். திருச்சபை நீதிமன்றம் அவர்களைப் பிடித்து சிறையில் அடைத்தது. ஒருமுறை 42 நாட்களும் இன்னொருமுறை 22 நாட்களும் அவர்கள் சிறைவாசகம் அனுபவிக்க நேர்ந்தது. சிறையில் அடைபட்டு இருந்தாலும் இனிகோ மனந்தளரவில்லை. நற்செய்தியினைப் போதிப்பதனையும் கைவிடவில்லை தனது பணிவாழ்வு தங்கு தடையின்றி செவ்வனே நடைபெறவேண்டுமானால் இறையியல் அறிவு இன்றி அமையாதது என்பதனை உணர்ந்த அவர் இறையியல் பாண்டித்தியம் பெற்று முதுநிலைப்பட்டம் பெறுவதற்காக பாரிஸ் நகரைநோக்கி ஒரு குதிரையில் பயணமானார்.

பார்சலோனா நகரிலே இனிகோ வாழ்ந்த காலத்தில் அவரது எளிமையான, தூய்மையான வாழ்க்கை முறையால் கவரப்பட்டவர்கள் பலர். ஆன்மீகத் தாகத்தை தீர்த்துக்கொண்டவர்கள் சிலர். அந் நகரிலே வாழ்ந்த செல்வச் சீமாட்டி இசபெல் ரோசர் முக்கியமான ஒருவராவார். இனிகோ அவரது ஆன்மீக வழிகாட்டியாகவும் விளங்கினார் என்பது அவருடைய ஆன்மீகக் குறிப்பேட்டில் பதியப்பட்டிருக்கிறது.

இனிகோவின் ஆன்மீகப் பயணத்தில் இசபெல் பலவழிகளில் உதவியும் உற்சாகமும் வழங்கினார்.



குறிப்பாக பல்கலைக்கழகப் படிப்பிற்காக பொருளாதார உதவிகளை அவர் வழங்கினார் என்பதும் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. பாரிஸ் நகரிலே வசதிகுறைந்த மாணவர்கள் நகரிலே குறைவான வாடகையுள்ள வீடுகளில் தங்கிப்படித்து வந்தார்கள் இனிகோவும் அவ்வாறான ஒரு அறையில் தங்கிப்படிக்க ஏற்பாடு செய்து கொண்டார். பீற்றர், பாபர, ∴பிரான்சிஸ் சேவியர் என்னும் இளைஞர்களோடு ஒரேஅறையில் தங்க நேர்ந்தது.

பீற்றர்∴பாபர் இனிகோவிற்கு பாடம் கற்றுக்கொடுத்தார். முதுகலைப் பட்டப் படிப்பை முடித்திருந்த சேவியர் **"போவே"** என்னும் கல்லூரியிலே பேராசிரியராகப் பணிபுரிந்தார் இந்த இருவரோடு ஆன்மீகம் பற்றிப் பேசி இனிகோ அவர்கள் மனங்களை இறைவன்பால் உந்தச் செய்தார். **"ஆன்மீகப் பயிற்சிகளை"** அவர்களுக்குக் கற்பித்துக் கொடுத்தார். இவ்விருவரும் இயேசுவின் நற்செய்திப் பணிக்காக தங்களை அரப்பணித்து இனிகோவின் இனிய தோழர்களாக தங்களையே இணைத்துக் கொண்டனர். சான்பார்பு, மோன்தெகு என்ற இருகல்லூரிகளிலும் பயின்ற இனிகோ இருபெரும் உயர்குடி மாணவர்களை மனம் மாற்றினார். அவர்களது குடும்பங்களோ ஐரோப்பிய நாடுகள் முழுவதிலும் பெயர் பெற்ற பெரும் புள்ளிகள் அவ்விருவரும் பாட நூல்களை விற்றுவிட்டு இனிகோவுடன் இணைந்து பாரிஸ் மாநகர வீதிகளில் பிச்சையெடுக்கத் தொடங்கினர். இதைக் கண்ட சகமாணவர்கள் கொதித் தெழுந்தனர். கல்லூரியில் பூகம்பமே வெடித்தது இளைஞர்களை மூளைச்சலவை (Brainwash) செய்து திசைமாறிச் செல்லக் காரணமாய் இருந்த இனிகோவைத் தண்டிக்கத் தீர்மானித்தனர். "லாசாலா" என்ற தண்டனை இனிகோவிற்கு வழங்கப்பட்டது. இதன்படி எல்லா மாணவர்களும் ஒரு பெரிய அறையில் கூட வேண்டும். ஆசிரியப் பெருமக்கள் தங்கள் கைகளில் பிரம்புகளோடு அறையின் நடுவே இரு வரிசையில் நிக்கவேண்டும் குற்றவாளியைக் கல்லூரி முதல்வர் கூட்டிவந்து நடுவில் நடந்து செல்ல வேண்டும். குற்றவாளியை அரை நிர்வாணமாக்கி பிரம்பால் நையப்புடைக்க வேண்டும். இத்தண்டனையை ஏற்றுக்கொள்ள இசைந்த இனிகோ தண்டனையைப் பெறுமுன் சிறிதுநேரம் கல்லூரி முதல்வரோடு பேச அனுமதி கேட்டார். இருவருக்கும் இடையே என்ன உரையாடல் நடந்ததோ தெரியவில்லை கல்லூரி முதல்வர் பேராசிரியர் தெகூவயா இனிகோவை அறையிலிருந்து அழைத்து வந்து எல்லார் முன்னிலையிலும் முழந்தாட்படியிட்டு இனிகோவிடம் மன்னிப்புக் கேட்டார். இந்நிகழ்ச்சி இனிகோவிற்கு மிகவும் சாதகமாக இருந்தது. பலமாணவர்கள் அவரிடம் ஆன்மீக வாழ்வைப் பற்றி அறிதேனைத் தேடும் தேனீக்களைப் போல் மொய்த்தனர்.

தொடரும்..........

# கிறிஸ்து பிறப்பு

மார்கழி வந்தால் கத்தோலிக்கர்களாகிய நாம் ஒவ்வொருவரும் ஏதோ ஒன்றை ஏக்கத்துடன் எதிர்பாத்துக் காத்திருப்பவர்களாக இருக்கின்றோம். ஆம் அன்பின் விழா, அமைதியின் விழா, ஒளியின் விழா, மகிழ்ச்சியின் விழா என பல்வேறு விதமாக அழைக்கும் கிறிஸ்து பிறப்பு விழாவேயா-கும் இனமொழி பிரதேச வேறுபாடுகளின்றி எல்லா நாட்டினரும் தங்களுக்கேயுரிய கலாச்சாரத்தில் கிறிஸ்து பிறப்பு விழாவைக் கொண்டாடுகின்றார்கள்.

நாம் வாழ்வு பெறும் பொருட்டு கடவுள் ஒரே மகனை உலகிற்கு அனுப்பினர் இதனால் கடவுள் நம்மீது வைத்த அன்பு வெளிப்பட்டது. **(1யோவான் 4:9)** இதனையே கவிஞர் வைரமுத்து **"அன்பென்ற மழையிலே அகிலங்கள் நனையவே அதிருபன் தோன்றினானே"** என அழகாகக் கூறியுள்ளார் ஆம் கிறிஸ்து பிறப்பு முகவரியில்லாத மாபெரும் வரலாற்று நிகழ்வு ஏனெனில் மாறாதவர் மாறினார் அணுக முடியாதவர் அணுகிவந்தார். **"வார்த்தை மனிதர் ஆனார் நம்மிடையே குடி கொண்டார் அவரது மாட்சியை நாங்கள் கண்டோம்".** **(யோவான் 1:4)** கடவுள் மனிதனைத் தேடி வந்ததை அதன் பொருட்டு மனித அவதாரம் எடுத்ததை கிறிஸ்து பிறப்பு உணர்த்துகின்றது. எல்லா மக்களுக்கும் பெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கின்றேன் என வானதூதர் கிறிஸ்துவின் பிறப்பின் நற்செய்தியை அறிவித்தனர்.

ஒரு குடும்பத்தில் குழந்தை ஒன்று பிறந்தால் பெற்றவரும் உற்றவரும் மகிழ்ச்சியைக் கொண்டாடுகின்றனர்.

ஆனால் கிறிஸ்துவின் பிறப்பானது உலகம் முழுவதும் மகிழ்ச்சியைக் கொடுக்கும் விழாவாக அமைந்துள்ளது ஆம் அவரது பிறப்பினால் அவநம்பிக்கை என்ற இருள் மறைந்து நம்பிக்கை ஒளி பிறந்தது சாவாகிய இருள் மறைந்தது வாழ்வாகிய ஒளி பிறந்தது. மனிதர்கள் எல்லாம் வெறும் இயந்திரமாக மாறி வரும் இக்கால கட்டத்தில் நாம் கொண்டாடும் கிறிஸ்து பிறப்பு விழா அர்த்தமுடையதாக மாற வேண்டுமானால் நம்மைச் சுற்றியுள்ள பல விதமான இருளையும் அகற்றி ஒளியேற்ற வந்த கிறிஸ்துவின் மேல் நம்பிக்கை வைக்க வேண்டும் அவர் பிறப்பு தரும் மகிழ்ச்சியை உள்ளத்திலும்



இல்லத்திலும் ஏன் உலகம் முழுவதும் கொண்டாடுவோம் ஆனால் இம் மகிழ்ச்சியிலே பங்குபற்ற முடியாமல் தனிமையில் வறுமையில் அகதிமுகாமில், சிறைச்சாலைகளில், மருத்துவ மனைகளில் துயருறும் மக்களையும் நினைவு கூறுவோம். எம்மால் இயன்ற உதவிகளைச் செய்வோம் ஆடம்பரங்களை குறைத்து அகிலத்தை வாழவைக்க தயங்காது தியாகங்கள் செய்து மற்றவர்களையும் மகிழ்ச்சிப்படுத்துவோம் அன்பின் விழாவை அர்த்தமுள்ளதாக்குவோம்.

**திருமதி ஜேசுதாசன் தம்மிகா**
**மூதூர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குட்டிக்கதை ஒன்று

*Fr. NC*

ஒரு ஊரிலே ஒருவர் திடீரென்று அங்குமிங்கும் பார்த்துவிட்டு ஓடத் தொடங்கினார். பின்னர் திரும்பிப் பார்க்கவே இல்லை ஓடும் வேகத்தைக் கூட்டிக்கொண்டே போனார்

ஒரு குறிப்பிட்ட தூரம் ஓடியபின் அப்படியே களைத்து நிலத்திலே இருந்துவிட்டார். அதன் பிறகுதான் பார்த்தார் தனக்குப்பின்னால் இன்னும் பலர் ஓடிவந்திருக்கிறார்கள்.

ஓடிவந்தவர்களுள் ஒருவர் ஏற்கனவே ஓடி வந்து இருப்பவரிடம் கேட்டார் **'நீ ஏன் ஓடி வந்தாய் என்ன நடந்தது'** என்று

**'நான் சும்மா ஓடிவந்தேன்'** என்றார் முன்னே ஓடிவந்தவர் அதற்குபின்னால் ஓடி வந்தவர்களில் பலர் ஆர்ப்பரித்து **' நாங்கள் ஏதோ நடக்கக் கூடாதது நடக்கப் போகிறதென்று பயந்து அதுவும் நீ ஓடிய ஓட்டத்தைக் கண்டு பயந்து ஓடி வந்தனாங்கள்'** என்றார்கள். முன்னே ஓடி வந்தவர் ஒன்றுமே பேசாதிருந்தார்.

ஒருவர் ஓடினால் கேட்டோடு என்பதை அவர்கள் அறியவில்லைபோலும்.

## யாழ் மறைமாவட்டத்தின் புதிய குருமுதல்வர்

யாழ் மறைமாவட்டத்தின் புதிய குருமுதல்வராக அருட்தந்தை பத்தினாதர் யோசப்தாஸ் ஜெபரெட்ணம் அடிகளார் நியமனம் செய்யப்பட்டுள்ளார். யாழ் மறைமாவட்டத்தின் குருமுதல்வராக பணியாற்றி அருட்தந்தை கலாநிதி ஜஸ்ரின் பேணாட் ஞானபிரகாசம் அடிகளார் புதிய ஆயராக நியமிக்கப்பட்டதையடுத்து யாழ் மறைமாவட்டத்தின் குருமுதல்வராக கலாநிதி ப.யோ. ஜெபரெட்ணம் அடிகளார் யாழ் ஆயர் பேரருட் திரு கலாநிதி ஜஸ்ரின் பேணாட் ஞானபிரகாசம் ஆண்டகையால் நியமனம் செய்யப்பட்டுள்ளார். புதிய குருமுதல்வராக அருட்தந்தை கலாநிதி ப. யோ. ஜெபரெட்ணம் அடிகளார் கொழும்புத் துறை புனித சவேரியார் குருமட உப அதிபராகவும், விரிவுரையாளராகவும், கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது புதிய குருமுதல்வரின் தெரிவு செய்யப்பட்டமை தொடர்பிலான் அறிவித்தலானது 09.11.2015 மாலை யாழ் மரியன்னை பேராலயத்தில் நடைபெற்ற திருப்பலியை தொடர்ந்து யாழ் ஆயர் பேரருட்திரு கலாநிதி ஜஸ்ரின் பேணாட்ஞானபிரகாசம் ஆண்டகையால் உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

**அவருக்காக செபிப்போம் வாழ்த்துவோம்**

# எல்லாருக்குமான விழா கிறிஸ்மஸ்



இயேசுவை மையப்படுத்தி மூன்று விழாக்கள் கொண்டாடப்படுகின்றன. அந்த மூன்று விழாக்களிலும் மையமாக இருக்கும் கருத்து என்னவென்றால் **'எல்லாருக்காகவும் இயேசு'** என்பதாகும்.

1. **கிறிஸ்மஸ் பெருவிழா:** 'இதோ எல்லா மக்களுக்கும் பெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தி' (லூாக் 2:10)
2. **உயிர்ப்பு பெருவிழா:** 'நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள்' (மத்.28:19)
3. **பெந்தக்கோஸ்து பெருவிழா:** 'இறுதி நாள்களில் நான் மாந்தர் யாவர் மேலும் என் ஆவியைப் பொழிந்தருள்வேன்.' (திப 2:17)

**எல்லாருக்குமான கிறிஸ்மஸ் பெருவிழாவில் அருளப்பட்ட கொடைகள் மூன்று:**

1. **அன்பு:** தம் ஒரே மகன் மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலை வாழ்வு பெறும் பொருட்டு அந்த மகனையே அளிக்கும் அளவுக்கு கடவுள் உலகின் மேல் அன்பு கூர்ந்தார். (யோவான் 3:16)
2. **மகிழ்வு:** இதோ, எல்லா மக்களுக்கும் பெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன் (லூாக். 2:10)
3. **அமைதி:** 'உன்னதத்தில் கடவுளுக்கு மாட்சி உரித்தாகுக! உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதி உண்டாகுக!' (லூாக். 2:14)

**எல்லாருக்குமான கிறிஸ்மஸ் பெருவிழாவில் வெளிப்பட்ட கடவுளின் பண்புகள் மூன்று:**

1. **மனிதன்:** வாக்கு மனிதர் ஆனார், நம்மிடையே குடி கொண்டார். (யோவான் 1:14)
2. **குழந்தை:** உம்மிடம் பிறக்கப்போகும் குழந்தை தூயது, அக் குழந்தை இறைமகன் எனப்படும். (லூாக். 1:36, 2:7, 12,17)
3. **ஏழை:** குழந்தையைத் துணிகளில் சுற்றித் தீவனத் தொட்டியில் கிடத்தியிருப்பதைக் காண்பீர்கள் (லூாக். 2:12,)

**எல்லாருக்குமான கிறிஸ்மஸ் பெருவிழாவில் அருளப்பட்ட பேறுகள் மூன்று:**

1. **பாவமன்னிப்பு வழங்க:** அவருக்கு இயேசு எனப் பெயரிடுவீர். ஏனெனில் அவர் தம்மக்களை அவர்களுடைய பாவங்களிலிருந்து மீட்பார் (மத். 1:21)
2. **நம்மோடு உடனிருக்க:** இம்மானுவேல் என்றால் கடவுள் நம்முடன் இருக்கிறார் என்பது பொருள் (மத். 2:22-23)
3. **நம்மைச் செல்வந்தராக்க:** நம் ஆண்டவர் இயேசுக் கிறிஸ்துவின் அருள் செயலை அறிந்திருக்கிறீர்களே! அவர் செல்வராயிருந்தும் உங்களுக்காக ஏழையானார்.அவருடைய ஏழ்மையினால் நீங்கள் செல்வராகுமாறு இவ்வாறு செய்தார் ( 2கொரி. 8:9)

கிறிஸ்து பிறப்புப் பெருவிழா நம் தேடலுக்கு நிறைவு விழா. நமக்காகவே மலர்ந்துள்ள திருவிழா. வாருங்கள் இறைமகனை ஆராதிப்போம். வாழ்வுக்குப் பொருளாகும் வளம் சேர்ப்போம்.

# கிறிஸ்து பிறப்பு விழா

## மனமாற்றமே உண்மையான தயாரிப்பு



இன்னும் சில தினங்களில் இவ்வாண்டின் கிறிஸ்து பிறப்பு விழாவை சிறப்பாக கொண்டாட உள்ளோம். ஊங்களுக்கு தெரிந்தது போல இந்த விழாவுக்காக உலகமெல்லாம் பல வழிகளில் தயாரிப்புக்கள் நடந்து கொண்டிருக்கின்றன.

வெளிநாடுகளில் பெரிய அளவிலான கேக் செய்தும், பல வகையான புதுமையான பரிசுகளை அறிமுகப்படுத்தியுள்ளதை செய்தித்தாள்களில் படித்திருப்போம். அது மட்டுமல்லாமல் கிறிஸ்மஸ் தாத்தா படங்கள் அனைத்து கடைகளின் வாயில்களில் நமது கவனத்தை ஈர்க்கக் கூடிய வகையில் அமைக்கப்பட்டுள்ளதையும் பார்த்திருப்போம்.

மேலும் தோரணைகள், புதுவிதமான சோடினைகள், கண்ணைக் கவரும் அலங்காரப் பொருட்கள் எல்லாம் படையெடுத்து விட்டதைப் பார்த்து இரசித்திருப்போம். பற்றாக்குறைக்கு துணிக்கடைகளில் அதிரடி தள்ளுபடியில் ஆடை வியாபாரம் அமோகமாக நடந்து கொண்டிருப்பதையும் கவனித்திருப்போம். அது மட்டுமல்லாமல் பங்கு ஆலயங்களில் குடில் போட்டிக்கான வேலைகள் துவங்கி விட்டன. இல்லங்களில் கிறிஸ்து பிறப்பு பாடல்கள் பாட கரோல் குழுக்களும் வரத் தொடங்கி விட்டார்கள். இவைகளோடு நமது தயாரிப்புக்கள் முடிந்து விடப் போகின்றனவா? இவைகளில் மட்டும் தான் கவனம் செலுத்தப் போகின்றோமா என்பதைப் பற்றி சிந்தித்துப் பார்ப்பது நமது வாழ்க்கைக்கு பயனுள்ளதாக இருக்கும்.

கிறிஸ்து பிறப்பு விழாவிற்கான உண்மையான தயாரிப்பு மனமாற்றத்திலே அடங்கியுள்ளது என்ற உண்மையை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். மனமாற்றமே உண்மையான தயாரிப்பு. காரணம் என்னவென்றால் ஆரவாரமும், ஆடம்பரமும் நம்மை அடுத்திருப்பவனில் இறைவனைக் காண உதவாது. ஆனால் உள்ளத்தை அலசி ஆராய்ந்து ஆண்டவரின் வார்த்தையின் ஒளியில் மாற்றம் காணும் போது உண்மையாகவே நம்முள்ளத்தில் இயேசு பிறப்பார்.

இதுவே கிறிஸ்து பிறப்பு விழாவுக்க நாம் செய்யும் சிறப்பான தயாரிப்பாகும். இந்த உண்மையை நமக்கு மீண்டும் உணர வைக்கவே 'பாவமன்னிப்பு அடைய மனம்மாறி திருமுழுக்குப் பெறுங்கள்' என்று இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு திருமுழுக்கு யோவான் பாலைவனத்தில் முழக்கமிட்ட வார்த்தைகள் திருவருகைக்காலத்திலே நமக்கு நினைவு படுத்தப்படுகின்றன.

"shuv" என்ற எபிரேய வார்த்தை தான் தமிழில் மனமாற்றம் என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. "shuv" என்பதற்கு 180 பாகை திரும்புதல் என்று பொருள். ஆங்கிலத்தில் "Making and about turn" என்று சொல்லலாம். அதாவது ஒரு குறிப்பிட்ட திசையில் சென்று கொண்டிருக்கும் ஒருவர் திடீரென்று 180 பாகை திரும்பி தான் சென்று கொண்டிருந்த திசைக்கு எதிரான திசையில் செல்வது தான் உண்மையான மனமாற்றம். சுருக்கமாகச் சொல்லப் போனால் நாம் சென்று கொண்டிருக்கிற திசையிலிருந்து திரும்பி இறைவனை நோக்கிப் பயணித்தல் என்று சொல்லலாம்.

இத்தகைய மனமாற்றத்திற்கு நாம் என்ன செய்ய வேண்டும் என்ற கேள்வி நம் உள்ளத்தில் எழலாம். மூன்று காரியங்கள் அல்லது செயல்கள் நம் மனமாற்றத்திற்கு உதவியாக இருக்குமென நான் நம்புகிறேன்.

**முதலாவது,** தினந்தோறும் இறைவார்த்தையைப் படித்து தியானிப்போம். உள்ளத்தை ஊடுருவக்கூடிய இறைவார்த்தை நமது வாழ்க்கையை உலுக்கும்.

**இரண்டாவது,** நடந்து வந்த பாதையை ஆய்வு செய்து நடக்கவிருக்கும் பாதையை நற்செய்தியின் அடிப்படையில் வடிவமைப்போம்.

**மூன்றாவதாக,** நம்மை விட எளியோருக்கு, நம்மை விட வலிமை குறைந்தவருக்கு இந்த ஆண்டு கிறிஸ்து பிறப்பு விழாவை பொருள் உதவி செய்து அர்த்தமுள்ளதாக்குவோம்.

இவ்வாறு செய்யத் தொடங்கும் போது நம் ஒவ்வொருவரின் உள்ளத்திலும் இயேசு பிறப்பார் என்பது உறுதி. இந்த நம்பிக்கையில் நமது வாழ்க்கைப் பயணத்தை தொடருவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்மஸ் சிறப்புப் போட்டி

## கிறிஸ்மஸ் சிறப்பு வினாவிடைப் போட்டி

01. கிறிஸ்மஸ் தாத்தா (சாண்டாகிளாஸ்) எங்கு எப்போது பிறந்தார்?
விடை ..........................................................
02. கிறிஸ்மஸ் தாத்தா தினம் எப்போது?
விடை ..........................................................
03. தூய நிக்கோலஸ் இறந்த நாள் எது?
விடை ..........................................................
04. கரோல் பாடிச் செல்லும் பழக்கம் எப்போது தோன்றியது?
விடை ..........................................................
05. கிறிஸ்மஸ் குடில் யாரால்? எப்போது? எங்கு உருவாக்கப்பட்டது?
விடை ..........................................................
..........................................................
06. சாண்டாகிளாஸை ஒரு குண்டான சிகப்புத் தொப்பியுடன் கிறிஸ்மஸ் தாத்தா என்று உருக் கொடுத்தவர் யார்?
விடை ..........................................................
07. கிறிஸ்மஸ் மரம் எப்போது? யாரால் உருவாக்கப்பட்டது?
விடை ..........................................................
08. வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட மரத்தை (கிறிஸ்மஸ் மரம்) குழந்தைகளுக்கு அறிமுகப்படுத்தியவர் யார்? எப்போது?
விடை ..........................................................
..........................................................
09. கிறிஸ்மஸ் மரம் வைக்கும் பழக்கம் தோன்றுவதற்கு காரணமாய் இருந்தவர்கள்?
விடை ..........................................................
10. "கிறிஸ்துமஸ்" என்ற சொல்லின் பொருள் யாது?
விடை ..........................................................
11. தீவனத் தொட்டி என்று அழைக்கப்படுவது எது?
விடை ..........................................................
12. இயேசுவின் தனி முதற் சீடராக விளங்குபவர் யார்?
விடை ..........................................................
13. இறை இரக்கத்தின் நற்செய்தி என அழைக்கப்படும் நற்செய்தி நூல் எது?
விடை ..........................................................
14. திருவருகைக் காலத்தில் பாவிக்கப்படும் மெழுகுதிரிகளின் நிறங்கள்?
விடை ..........................................................
15. திருவருகைக்கால மெழுகுதிரிகளின் நிறங்கள் எமக்கு எவற்றை தெளிவுபடுத்துகின்றது?
விடை ..........................................................

பெயர் ..........................................
முகவரி ..........................................
பங்கு ..........................................

முடிவுத் திகதி 31.12.2015

## பின்வரும் இறைவார்த்தைகள் எந்த நற்செய்தியில் எவ்வதிகாரம், வசனங்களில், காணப்படுகின்றது என்பதை குறிப்பிடுக (தூய மத்தேயு, தூய லூக்கா)

1. "யோசேப்பே தாவீதின் மகனே உம் மனைவி மரியாவை ஏற்றுக் கொள்ள அஞ்ச வேண்டாம் ஏனெனில் அவர் கருவுற்றிருப்பது தூய ஆவியால் தான்" யாருக்கு கூறப்பட்டது?
விடை ..........................................................
2. நான் கபிரியேல் கடவுளின் திருமுன் நிற்பவன் உம்மோடு பேசவும் இந்த நற்செய்தியை உமக்கு அறிவிக்கவும் அனுப்பப்பட்டேன்.
விடை ..........................................................
3. மரியா புறப்பட்டு யூதேயா மலை நாட்டிலுள்ள ஓர் ஊருக்கு விரைந்து சென்றார் அவர் செக்கரியாவின் வீட்டை அடைந்து எலிசபேத்தை வாழ்த்தினார்
விடை ..........................................................
4. யூதர்களின் அரசராகப் பிறந்திருக்கிறவர் எங்கே அவரது விண்மீன் எழக்கண்டோம். அவரை வணங்க வந்திருக்கிறோம்?
விடை ..........................................................
5. பாவ மன்னிப்பால் வரும் மீட்பை அவர் தம் மக்களுக்கு அறிவித்து ஆண்டவருக்கான வழியைச் செம்மைப்படுத்த அவர் முன்னே செல்வாய்
விடை ..........................................................
6. விடுதியில் அவர்களுக்கு இடம் கிடைக்க வில்லை. எனவே பிள்ளையைத் துணிகளில் பொதிந்து தீவனத் தொட்டியில் கிடத்தினார்
விடை ..........................................................
7. என் மக்களாகிய இஸ்ரயேலை ஆயரென ஆள்பவர் ஒருவர் உன்னிலிருந்து தோன்றுவார்.
விடை ..........................................................
8. இம்மீட்பே பிற இனத்தாருக்கு வெளிப்பாடு அருளும் ஒளி, இதுவே உம் மக்களாகிய இஸ்ரயேலுக்குப் பெருமை.
விடை ..........................................................
9. இதோ இக்குழந்தை இஸ்ரயேல் மக்களுள் பலரின் வீழ்ச்சிக்கும், எழுச்சிக்கும் காரணமாக இருக்கும் எதிர்க்கப்படும் அடையாளமாகவும் இருக்கும்.
விடை ..........................................................
10. நீங்கள் சென்று குழந்தையைக் குறித்துத் திட்ட வட்டமாய் கேட்டு எனக்கு அறிவியுங்கள் அப்பொழுது நானும் சென்று அக்குழந்தையை வணங்குவேன்.
விடை ..........................................................
11. பலருடைய மறைவான எண்ணங்கள் வெளிப்படும். உமது உள்ளத்தையும் ஒரு வாள் ஊடுருவிப் பாயும்.
விடை ..........................................................
12. குழந்தையும் வளர்ந்து வலிமை பெற்று ஞானத்தால் நிறைந்து கடவுளுக்கு உகந்ததாய் இருந்தது.
விடை ..........................................................
13. ஞானிகள் தன்னை ஏமாற்றியதை ஏரோது கண்டு மிகுந்த சீற்றம் கொண்டான்.
விடை ..........................................................
14. நேர்மையாளர்களின் மனநிலையைக் கீழ்ப்படியாதவர்கள் பெறச் செய்வார் இவ்வாறு ஆண்டவருக்கு ஏற்புடைய ஒரு மக்களினத்தை ஆயத்தம் செய்வர்.
விடை ..........................................................
15. மரியா இந் நிகழ்ச்சிகளையெல்லாம் உள்ளத்தில் இருத்திச் சிந்தித்துக் கொண்டிருந்தார்.
விடை ..........................................................

பெயர் ..........................................
முகவரி ..........................................
பங்கு ..........................................

முடிவுத் திகதி 31.12.2015

## இயேசுவின் பிறப்போடு கூடிய இடங்கள்/ நகரங்கள்/ ஊர்கள் இவற்றில் குறைந்தது 10ஐ கண்டுபிடிக்கவும்

உதாரணம் (சி ரி யா)

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ரு | ள | ஞ | எ | ரு | ச | லே | ம் |
| பா | அ | ரு | கி | ப | கு | லி | கே |
| பி | ங் | ட | ப் | தே | நா | வ | ல |
| லோ | ஞ | ள | து | க | ச | ன் | த் |
| ன் | தா | ர் | யோ | இ | ரே | லோ | பெ |
| ங் | வு | ல் | பா | டு | த் | பி | கு |
| ட | ரா | யே | ய | ள் | து | பா | க |
| து | மா | ர | ரி | எ | மி | று | லி |
| வீ | வி | ஸ் | சி | று | பா | மு | லே |
| [illegible] | லே | இ | உ | கு | யூ | தே | யா |

பெயர் ..........................................
முகவரி ..........................................
பங்கு ..........................................

முடிவுத் திகதி 31.12.2015

அனுப்ப வேண்டிய முகவரி:
கிறிஸ்மஸ் சிறப்புப் போட்டி
திருமலைத் தீபம்
இல: 297, டொக்கியாட் வீதி,
திருகோணமலை



மூன்று போட்டிகளுக்குமான பரிசுத்தொகை
1ம் பரிசு - 1000/=
2ம் பரிசு - 700/=
3ம் பரிசு - 500/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### விடுபட்ட எழுத்துப் புதிர் போட்டி- 14
### திருத்தூதர் பணி அதி 05 - 08

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| பா | லை | நி | ல | ப் | பா | தை | | கொ | ள் |
| | தீ | ப் | பி | ழ | ம் | பி | ல் | தி | க |
| ஆ | | சா | ல | மோ | ன் | | | த் | ர் |
| ட் | வா | | உ | ரோ | ம | ம் | | தெ | வ |
| டு | க் | | ம் | று | தோ | ள் | நா | ழு | து |
| க் | கு | இ | ளை | ஞ | ர் | க | ள் | ந் | மு |
| கு | று | | ள் | க | லை | க | | து | ல |
| ட் | தி | | | ன் | வா | தே | ஸ் | | கு |
| டி | | நி | லை | த் | தி | ரு | ப் | போ | ம் |
| ந | ச | ரே | ய | ரா | கி | ய | இ | யே | சு |

1. சா<u>ல</u>மோன் 2. கொதி<u>த்</u>தெ<u>ழு</u>ந்து 3.ஸ்தே<u>வா</u>ன்
4. நிலை<u>த்</u>தி<u>ரு</u>ப்போம் 5. நசரே<u>ய</u>ராகிய இ<u>யே</u>சு
6. வா<u>க்</u>குறு<u>தி</u> 7. கு<u>ல</u>முதுவ<u>ர்</u>கள் 8. க<u>லை</u>கள்
9. தீப்பி<u>ழ</u>ம்<u>பி</u>ல் 10. பா<u>லை</u> நிலப் பா<u>தை</u>
11. ஆட்<u>டு</u>க்கு<u>ட்</u>டி 12. இளை<u>ஞ</u>ர்க<u>ள்</u> 13. நா<u>ள்</u>தோ<u>று</u>ம்
14. உரோ<u>ம</u>ம்

**பங்குபற்றிய அனைவருக்கும் வாழ்த்துக்களும், நன்றிகளும்.**

## பரிசுக்குரியவர்கள்:-

**1ம் பரிசு 500/=**
அ. கரோலினி கீர்த்திகா
57, தபால் நிலைய வீதி
திருகோணமலை

**3ம் பரிசு 200/=**
R. டியோன்
மின்சார நிலையவீதி
மூதூர் - 7

**2ம் பரிசு 300/=**
D. சுஜீவன்
தாய ஜோசப்வாஸ் சிறிய குருமடம்
உப்புவெளி



பங்குபற்றியோர் ~ 53பேர்
சரியானவிடையளித்தோர் ~ 39பேர்

## பாராட்டுக்குரியவர்கள்

01. A. லினாசியேனி ~ நிலாவெளி
02. L.S. பியூரா ~ பேராலயம்
03. ஜெயலா போல் ~ பாலையூற்று
04. J.செபானா ஆன் ~ கன்னியா
05. த. டிலுசியா ~ இலிங்கநகர்
06. டானியாலா B.R.F ~ பேராலயம்
07. ஆன்வஜிரா R.F ~ பேராலயம்
08. ஜெரோமினா தேவன் ~ பேராலயம்
09. றெ. கன்சி ~ நிலாவெளி
10. J. பிரீத்தி ~ நிலாவெளி
11. A. லின்சிகா ~ பள்ளத்தோட்டம்
12. து. ஹரிணி ~ நிலாவெளி
13. யோ. அருஷன் ~ அன்புவழிபுரம்
14. D. இவாஞ்சலின் ~ உவர்மலை
15. அ. லக்ஷிக்கா ~ கும்புறுபிட்டி
16. தே. ஜெயலட்சுமி ~ கும்புறுபிட்டி
17. R. எமில்ராஜ் ~ செல்வநாயகபுரம்
18. த. அனிஸ்ரன் ~ இலிங்கநகர்
19. E. ஜெசானியா ~ பேராலயம்
20. D. சனோஜ் அன்ரனி ~ உவர்மலை
21. அ. லக்ஷன் ~ குவாடலுப்பே
22. றொ. றொவீனா ~ பேராலயம்
23. G. கிஷோன் ~ பாலையூற்று
24. R. கன்சிக்கா ~ மூதூர்
25. L.P. ஹர்ஷிக்கா ~ பாலையூற்று
26. லக்ஷிக்கா ஜே.கோ ~ பாலையூற்று
27. வேஜின் டி குரூஸ் ~ அன்புவழிபுரம்
28. சரோனா R.F ~ பேராலயம்
29. F. பிரியங்க ~ கும்புறுபிட்டி
30. G.B நிலக்ஷன் ~ பாலையூற்று
31. செ. மரியமேரி ~ கும்புறுபிட்டி
32. ம. தர்ஷிக்கா ~ பேராலயம்
33. துதினா சஜீவன் ~ இலிங்கநகர்
34. டொ.றொ. பியுலா ~ பேராலயம்
35. த. அனோஜா ~ கும்புறுபிட்டி

# திருமலை மறைமாநில மேய்ப்புப்பணி.....

1ம் பக்கத்தொடர்ச்சி

தேனீர் இடைவேளைக்குப் பின்னர் பொதுநிலையினர் ஆணைக்குழுவின் இயக்குனர் அருட்பணி ஏ. றொகான் பேணாட் அனைவரையும் வரவேற்று **'அன்பிய வழி இறை மந்தையை அறிந்து இரக்கத்தை சுவைத்து வாழ்ந்திட'** என்ற இரக்கத்தின் ஆண்டிற்கான பதாதையை அறிமுகம் செய்து வைத்து அன்றைய மகாநாட்டில் இடம் பெற இருக்கின்ற நிகழ்ச்சி நிரல் பற்றியும் உரையாற்றினார். தொடர்ந்து திருமலை மறைமாநில மேய்ப்புப் பணி பேரவையின் தலைவரும் மறைமாநிலத்தின் ஆயருமான பேரருட் திரு நோயல் இம்மானுவேல் ஆண்டகை அவர்கள் தமது தலைமையுரையில் மகாநாட்டிற்கு வருகை தந்திருந்த அனைவரையும் வரவேற்றதோடு 38 ஆண்டுகள் பணியாற்றி ஓய்வுபெற்றுச் சென்ற எமது முன்னாள் ஆயர் பேரருட் திரு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்களுக்கும் முன்னாள் பொதுநிலையினர் ஆணைக்குழுவின் இயக்குனர் அருட்பணி எஸ். எஸ் ஜோன்பிள்ளை அவர்களுக்கும் தமது நன்றியைத் தெரிவித்து புதிய இயக்குனர் அருட்பணி ஏ.றொகான் பேணாட் அவர்களையும் வரவேற்றார். அத்தோடு மகா நாட்டிற்கான இரக்கத்தின் ஆண்டு பற்றி உரை நிகழ்த்திய அருட்பணி அல்வின் பெர்ணான்டோ (கண்டி மறைமாவட்டம்), அருட்பணி ஏ.ஏ. நவரெட்ணம் அவர்களுக்கும் தமது நன்றியைத் தெரிவித்து மேலும் தமது ஆயர் திருநிலைப்படுத்தல் நிகழ்விற்கு பணியாற்றிய அனைவருக்கும் தமது நன்றியைத் தெரிவித்துக் கொண்டார் அத்தோடு ஆன்மீகம், கல்வி, சமூகம், இந்த மூன்று அம்சங்களின் அடிப்படையில் மறைமாவட்டத்திலே பல செயற்றிட்டங்கள் முன்னெடுக்கவுள்ளதாகக் கூறி அடுத்த ஆண்டிற்கான செயற்றிட்டங்களையும் முன்வைத்து தமது தலைமையுரையை நிறைவு செய்தார்.

அதனைத் தொடர்ந்து 25 வருட சேவை நிறைவைப் பாராட்டி பேராலயப்பங்கைச் சேர்ந்த உதவிக்கல்விப் பணிப்பாளர் திருமதி. புஸ்பேந்திரா ஜெராட் அவர்களும் அர்ப்பணிப்புடனான சிறந்த சமூகப்பணியாற்றி வருகின்ற பேராலய பங்கைச் சேர்ந்த திரு. ஜெரோம் பொன்சேக்கா றொபின் கெனடி அவர்களும் தேசிய ரீதியில் **'பிரதீபா பிரபா'** விருது பெற்ற தூய சூசையப்பர் கல்லூரியில் ஆசிரியராக பணியாற்றும் பாலையூற்றுப் பங்கைச் சேர்ந்த திருமதி. சுரேந்தினி மணிவண்னன் அவர்களும் ஆயரின் தலைமையில் பாராட்டப்பட்டு பொன்னாடை போர்த்தப்பட்டு நினைவுச் சின்னமும் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்கள்.

கௌரவிப்பினைத் தொடர்ந்து மறைமாநில மேய்ப்புப்பணிப் பேரவையின் 2014ம் ஆண்டறிக்கை மறைமாநில மேய்ப்புப்பணிச் சபையின் கூட்டறிக்கை செயலாளரால் வாசிக்கப்பட்டு சிறுதிருத்தத்துடன் சரியென முன்மொழிந்து வழிமொழிப்பட்டு சபையினரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அறிக்கை மீளாய்வு இடம் பெற்றது.

தொடர்ந்து யாப்பு சீர்திருத்தம் மேற்கொள்ள வேண்டியிருந்தமையினால் புதிய அங்கத்தவர் தெரிவானது அடுத்தவருடம் ஒத்திவைக்கப்பட்டது. பின் மறைமாநில பிரேரணைகள் ஆயரால் வாசிக்கப்பட்டு அதற்கான விளக்கங்கள் தெரிவிக்கப்பட்டன. மறைமாநில மேய்ப்புப் பணிச்சபையின் பொருளாளர் திருவாளர் அன்ரனிதாஸ் அவர்களினால் பொருளாளர் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து சிங்கள மொழி பேசுவோருக்கான மேலதிக செயலாளராக செல்வி அஞ்சலா தெரிவு செய்யப்பட்டார். இறுதியாக செயளாளர் சுரேந்தினி மணிவண்ணண் அவர்களின் நன்றியுரையுடனும் மதியம் 2.15 மணியளவில் மறைமாநில மேய்ப்புப்பணிப் பேரவை மகாநாடானது இனிதே நிறைவு பெற்றது.

**செயளாளர்**
**மறைமாநில மேய்ப்புப்பணிப் பேரவை.**

# அலை ஓசை கலைத் தொடர்பகத்தின் 4வது தொடர் பயிற்சிக் கருத்தரங்கு



கடந்த சில மாதங்களாக எமது திருகோணமலை மறைமாவட்டத்தில் இயங்கி வருகின்ற அலைஓசை கலைத் தொடர்பகத்தால் நடாத்தப்பட்டு வருகின்ற பயிற்சிக் கருத்தரங்கின் தொடர்ச்சியாக கடந்த 2015.11.25 போயா தினத்தன்றுகாலை 09.00 மணியளவில் புனித அந்தோனியார் ஆலயத்தின் முன் அமைந்துள்ள அலை ஓசை கலைத் தொடர்பகத்தின் அமைவிடத்தில் நடாத்தப்பட்டது.

இந்த 4வது கருத்தரங்கு 'தலைமைத்துவம்' என்ற கருவினை மையமாகக் கொண்டிருந்தது இக்கருத்தரங்கானது அருட்தந்தை அரோக்கியசாமி அடிகளாரால் நடாத்தப்பட்டது. இக்கருத்தரங்கில் தலைமைத்துவம் என்றால் என்ன? நல்ல தீய தலைமைத்துவத்துக்கான வித்தியாசம் , தலைமைத்துவத்தின் பண்புகள், மற்றும் 'ஒரு நல்ல தலைமைத்துவம் எவ்வாறு அமைய வேண்டும் போன்ற அம்சங்களை மையமாகக் கொண்டு அமைந்திருந்தது அருட்தந்தை அலெக்ஸ் செல்லையா அவர்களும் கருத்தரங்கின் போது சிறப்பான முறையிலும் பயனுள்ள விதத்திலும் விளக்கங்களோடு உரை வழங்கினார்.

அத்துடன் கலந்து கொண்டவர்களின் தலைமைத்துவ பண்புகளையும், அருளுரைகளையும் வெளிக்கொணரும் முகமாக அங்கத்தவர்களை மூன்று குழுக்களாக பிரித்து ஒவ்வொரு குழுவிற்கும் ஒவ்வொரு தலைப்புக்கள் வழங்கப்பட்டு அதனைப்பற்றி தத்தம் குழு அங்கத்தவர்களுடன் இணைந்து கலந்தாலோசனை செய்ததன் பின்னர் குழுவின் ஒருவரால் கருத்துக்கள் பகிரப்பட்டன.

அதனைத் தொடர்ந்து அலை ஓசை கலைத் தொடர்பகத்தின் இயக்குனர் அருட்தந்தை ஏ. றொகான் பேணாட் அவர்கள் திருவிவிலியத்திலிருந்து இறைவார்த்தைப் பகுதி ஒன்றினை மூன்று குழுக்களுக்கும் கொடுத்து இறைவார்த்தைப் பகுதிக்கும் தலைமைத்துவ விழுமியங்களுக்கும் உள்ள தொடர்பின் கருத்தாளம் பற்றி ஆராய வைத்ததன் பின் அதற்கான விளக்கத்தினை விபரித்து இப்பயிற்சிப் பட்டறைக்கு சிறப்பு சேர்த்தனர்.

இதனையடுத்து வருகின்ற மாதத்திற்கான அலைஓசைக் கலைத் தொடர்பகத்தின் ஒளி விழா திகதி தீர்மானிக்கப்பட்டு 03.30 மணியளவில் இறைவணக்கத்துடன் 2015.11.25க்கான பயிற்சி கருத்தரங்கானது பயனுள்ள வகையில் நிறைவுற்றது.

வி.கிஷாந்தன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Merry Christmas

# சிறுவர், ஆசிரியர் தின விழா



11.09.2015 ஞாயிறு தினம் அன்று அருட்தந்தை யூட்சர்வானந்தா அவர்களின் தலைமையில் சிறுவர் தினமும், ஆசிரியர் தினமும் கொண்டாடப்பட்டது. அன்று காலை 8 மணியளவில் அவர்களுக்காக திருப்பலி ஒப்புக்கொடுத்து வெகு விமர்சையாக கொண்டாடப்பட்டது. தொடர்ந்து மாணவர்களால் ஆசிரியர்களுக்கு மலர் மாலை, பூச்செண்டுகள் கொடுத்து வாழத்துக்கள் பரிமாறப்பட்டன. அன்றைய தினம் பி.ப 4மணிவரை ஆலய வளாகத்தினுள் விளையாட்டுக்களும், போட்டிகளும், கலை நிகழ்வுகளும் நடாத்தப்பட்டு அதற்கான பரிசில்களும் பங்குத்தந்தையினால் வழங்கப்பட்டு நிகழ்வு இனிதே நிறைவு பெற்றது.

மறையாசிரியர்
J.மேரி யூட்ஸ்

# ஓராண்டு நினைவஞ்சலி

'நீதியின் நிமித்தம் துன்புறுத்தப்படுவோர் பேறுபெற்றோர் ஏனெனில் விண்ணரசு அவர்களுக்குரியது' (மத் 5:10)

| உதித்தது | | மறைந்தது |
|---|---|---|
| 1953 ✝ 03 ✝ 04 |  | 2014 ✝ 12 ✝ 20 |

**அமரர். செல்லத்துரை மரியதாஸ்**

*'வாழ்வில் என்னை நேசித்தவர்களே இறப்பிலும் என்னை மறவாதீர்கள்'*

ஓராண்டா என்ன எத்தனைஆண்டுகள் சென்றாலும் உங்கள் நினைவு என் இதயத்தில் என்றுமே நீங்காது நிலைத்திருக்கும்.



அன்புடன் நினைவு கூறும் மனைவி
M.சபீனா சாந்தி
இல: 1118 இராயப்பர் வட்டாரம், பாலையூற்று
திருமலை.

## இலிங்கநகர் தூய யூதாததேயு ஆலய

# வருடாந்த திருவிழா



கடந்த 16.10.2015 அன்று மாலை பங்குத்தந்தை அருட்பணி இ.யூட்சர்வானந்தன் அவர்களது தலைமையில் அன்பியத் தலைவர்கள் சகிதம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நவநாட் திருப்பலிகள் அருட்பணி தேவராஜ் பீரிஸ் (அலிகம்பை பங்குத்தந்தை அம்பாறை) அருட்பணி J. எல்மோ (மணற்காடு பங்குத்தந்தை யாழ் மாவட்டம்) ஆகியோர்களது வழிகாட்டலில் சிறப்பான மறையுரைகளும் திருப்பலிகளும் மற்றும் நற்கருணை ஆராதனைகளும் ஒப்புக்கொடுக்கப்பட்டது. 25.10.2015 அன்று உவர்மலை குழந்தை இயேசு ஆலய பேண்ட் வாத்தியக் குழுவின் வரவேற்போடு திருவிழா கூட்டுத்திருப்பலி அருட்பணி ஜோர்ஜ் திசாநாயக்கா (சீனன்குடா பங்குத்தந்தை) அவர்களது தலைமையில் எமது பங்குத்தந்தை அருட்பணி இ.யூட்சர்வானந்தன் அவர்களும் இணைந்து ஒப்புக்கொடுக்கப்பட்டது.

தகவல்
C.T. சௌந்தரதாஸ்
தூய யோசேப்வாஸ் மூப்பர் அமைப்பு இலிங்கநகர்

# தேசிய ரீதியிலான திருவிவிலியப் போட்டி முடிவுகள் – 2015

### *தமிழ் பிரிவு*

## பேச்சுப் போட்டி

தரம் 6 - 9 கீழ்பிரிவு
1ம் இடம் செல்வன் டானியேல். திகாஷன் - உவர்மலைப்பங்கு

தரம் 10 - 11 மத்திய பிரிவு
3ம் இடம் செல்வி செல்வநேசன். சிரோமி - அலஸ்தோட்டப்பங்கு

## விவிலிய அறிவுப் போட்டி



தரம் 6 - 9 கீழ்பிரிவு
3ம் இடம் பாலையூற்றுப்பங்கு
தரம் 12 - 13
3ம் இடம் சாம்பல் தீவுப் பங்கு


### *சிங்களப் பிரிவு*

## பேச்சுப் போட்டி

தரம் 6 - 9 கீழ்பிரிவு
3ம் இடம் செல்வி ஹன்ஷி கிருணிக்கா - சீனன்குடாப் பங்கு

தரம் 10 - 11 மத்திய பிரிவு
3ம் இடம் செல்வி நிருனி தருக்கா - சீனன்குடாப்பங்கு

### *ஆங்கிலப் பிரிவு*



## பேச்சுப் போட்டி

தரம் 6 - 9 கீழ்பிரிவு
3 ம் இடம் செல்வி ஆன் டொனேஷியா ஜோன்பிள்ளை
பேராலயப் பங்கு

தரம் 10 - 11 மத்திய பிரிவு
3ம் இடம் செல்வி இவாஞ்சலின் டெஸ்மன் சதீஸ்குமார்
உவர்மலைப்பங்கு

தரம் 12 - 13 மேல்பிரிவு
2ம் இடம் செல்வி றொபட் நிவேதிக்கா உவர்மலை
(இலிங்கநகர்ப்) பங்கு

## நாடகப்போட்டி

தரம் 12 - 13 மேல்பிரிவு
1ம் இடம் உவர்மலைப்பங்கு



‘வாக்கு மனிதர் ஆனார் நம்மிடையே குடிகொண்டார்’ (தூய யோவான் 1:14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org